## மாங்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ம் தேதி திங்கட்கிழமை மாலை 03.00 மணிக்கு மாங்காடு நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற கூடத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் விவரம்.

நகராட்சி அலுவலகம்,
மாங்காடு
நாள்.15.07.2022

**நகர் மன்ற தலைவர்**
**மாங்காடு நகராட்சி.**

---

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் மே–2022 மற்றும் ஜுன்–2022 ஆகிய மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான மே–2022 மற்றும் ஜுன்–2022–ம் மாதங்களுக்கான வரவுகள் மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மற்றும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

மாங்காடு நகராட்சியில் சீனிவாசா நகர் முதல் ஓம்சக்தி நகர் வரை மற்றும் ஜனனி நகர் முதல் மாரியம்மன் கோயில் தெரு வழியாக சண்முகாணந்தா சாமி கோயில் வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் பணி வெள்ளதடுப்பு நிதி திட்டம் 2021–2022 ரூ.6.62 கோடி மதிப்பீட்டில் நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.10383/2021/E3, நாள்.18.04.2022 ன்படி நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து 31.05.2022 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டதில் பின்வரும் விவரப்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | சீனிவாசா நகர் முதல் ஓம்சக்தி நகர் வரை மற்றும் ஜனனி நகர் முதல் மாரியம்மன் கோயில் தெரு வழியாக சண்முகாணந்தா சாமி கோயில் வரை மூடியுடன் கூடிய மாநிர் வடிகால்பணி | 6,62,00,000/– | 1) திரு.எம்.என்.பாலசுந்தரம் மதிப்பீடு தொகையைவிட 0.05%குறைவு. |
| | | | 2) திருவாளர்.வீரா எண்டர்பிரைசஸ் மதிப்பீடு தொகையைவிட 16.47 % அதிகம். |

**அலுவலக குறிப்பு** –அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் ம ன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சியில் அரசாணை (நிலை) எண்.59 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் துறை நாள்.22.04.2022 ன்படி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரகுநாதபுரம் சுடுகாடு பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை (LPG Crematorium) அமைக்கும் பணிக்கு ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டதை தொடர்ந்து 08.06.2022 அன்று ஒப்பந்தம் கோரப்பட்டதில் பின்வரும் விவரப்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | ரகுநாதபுரம் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் | 1,36,00,000/– | 1) QUN INTERIORS மதிப்பீடு தொகையைவிட 0.05% குறைவு. |
| | | | 2) GOODCAREமதிப்பீடு தொகையைவிட 0.10%அதிகம். |

**அலுவலக குறிப்பு** – பொது மக்கள் நலன் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.6**

மாங்காடு நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT) 2021–2022ன் கீழ் குளம் மேம்பாடு பணிக்கு அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.05.2022ன்படி நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, 15.06.2022 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | சர்வே எண்.41, வார்டு எண்.2ல் அமைந்துள்ள நைனார் குளம் மேம்பாட்டு பணி. | 5050000/– | 1)மோகன் கான்டிராக்டர் மதிப்பீடு தொகையைவிட 0.13%குறைவு. |
| | | | 2)திருமதி.ஆர்.அமுதா மதிப்பீடு தொகையைவிட 0.70%அதிகம். |

| | | | |
|---|---|---|---|
| 2 | சர்வே எண்.822, வார்டு எண்.25ல் அமைந்துள்ள வன்னியர்பட்டு குளம் மேம்பாட்டு பணி. | 4850000/– | 1)திருவாளர் எம்.ஆர்.என்.இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் மதிப்பீடு தொகையை விட 0.05% குறைவு |
| | | | 2)திருமதி.ஆர்.அமுதா மதிப்பீடு தொகையைவிட 1.14%அதிகம். |
| 3 | சர்வே எண்.474/1C2Aல் வார்டு எண்.7ல் அமைந்துள்ள மாருதி என்கிளேவ் பூங்கா மேம்பாட்டு பணி. | 4540000/– | 1)திருமதி.ஆர்.அமுதா மதிப்பீடு தொகையைவிட 0.05%குறைவு. |
| | | | 2)மோகன் கான்டிராக்டர் மதிப்பீடு தொகையைவிட 0.13%அதிகம். |

**அலுவலக குறிப்பு** –அவசர அவசியம் கருதி மன்ற**த்தி**ன் ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடி**க்**கை மேற்கொ**ண்**டு ப**ணி** உ**த்**தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.7**

மாங்காடு நகராட்சியில் பொது நிதிப்பணிகள் 2022–2023ன் கீழ் பின்வரும் விவரப்படியான பணிகளை மேற்கொள்ள நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி அளிக்கப்பட்டதனை மேற்கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | அடிசன் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1)திருவாளர் வசந்தம் எலெக்ட்ரிகல்ஸ் மதிப்பீடு தொகையைவிட 0.12%குறைவு |
| | | | 2)மோகன் கான்ட்டிராக்டர் மதிப்பீடு தொகையைவிட 0.27%அதிகம் |
| 2 | சைபர் சிட்டி பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1) மோகன் கான்ட்டிராக்டர் மதிப்பீடு தொகையைவிட 0.09%குறைவு. |
| | | | 2)திருவாளர் வசந்தம் எலெக்ட்ரிகல்ஸ் மதிப்பீடு தொகையைவிட 0.90%அதிகம். |
| 3 | காமாட்சி அம்மன் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 0.09%குறைவு. |
| | | | 2)திரு.போஸ்காந்தி மதிப்பீடு தொகையைவிட 0.32%அதிகம். |
| 4 | சீனிவாசா நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1)திருவாளர் மேனகா அன் கோ மதிப்பீடு தொகையைவிட 0.12%குறைவு |
| | | | 2)மோகன் கான்ட்டிராக்டர் மதிப்பீடு தொகையைவிட 0.17%அதிகம். |
| 5 | ஸ்ரீராம்நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1)திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் மதிப்பீடு தொகையைவிட 0.12%குறைவு |
| | | | 2)மோகன் ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் மதிப்பீடு தொகையைவிட 0.92%அதிகம். |
| 6 | மாருதி என்கிளேவ் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1)திருமதி.ஆர்.அமுதா மதிப்பீடு தொகையைவிட 0.13%குறைவு. |
| | | | 2)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையை விட 0.26%அதிகம். |
| 7 | பத்மாவதி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 0.12%குறைவு. |
| | | | 2)திரு.போஸ்காந்தி மதிப்பீடு தொகையைவிட 0.07%அதிகம். |

| | | | |
|---|---|---|---|
| 8 | கே.கே. நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு மினி பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1)திரு.ஏ.சி.நாகலிங்கம் மதிப்பீடு தொகையைவிட 0.12%குறைவு.<br>2)திரு.எம்.மாயன் மதிப்பீடு தொகையைவிட 0.25%அதிகம். |
| 9 | பட்டூர் இந்திராநகர் பகுதியில் ஆழ்துளை கிணறு பவர் பம்பு அமைத்தல் | 300000 | 1)திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் மதிப்பீடு தொகையைவிட 0.12%குறைவு<br>2)மோகன் ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் மதிப்பீடு தொகையைவிட 0.30%அதிகம். |
| 10 | வசந்தபுரம் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு.<br>2)திரு.போஸ்காந்தி மதிப்பீடு தொகையைவிட 0.26%அதிகம். |
| 11 | பாலாண்டீஸ்வரன் கோயில்தெரு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு.<br>2)திரு.போஸ்காந்தி மதிப்பீடு தொகையைவிட 0.26%அதிகம். |
| 12 | திருவள்ளுவர் சிட்டி பேஸ் –1 பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திருமதி.ஆர்.அமுதா மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு.<br>2)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 0.15%அதிகம். |
| 13 | அம்பாள் கெஜலட்சுமி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திருமதி.ஆர்.அமுதா மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு.<br>2)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 0.15%அதிகம். |
| 14 | பாலாஜி அவென்யூ அம்பாள் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.போஸ்காந்தி மதிப்பீடு தொகையைவிட 0.07% குறைவு.<br>2)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 1.33%அதிகம். |
| 15 | ஜனனி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திருமதி.ஆர்.அமுதா மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு.<br>2)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 0.24%அதிகம். |
| 16 | பிரியம் அவென்யூ நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.போஸ்காந்தி மதிப்பீடு தொகையைவிட 0.07% குறைவு.<br>2)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 1.33%அதிகம். |
| 17 | இந்திரா நகர் மேல்ரகுநாதபுரம் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திருவாளர் மேனகா அன் கோ மதிப்பீடு தொகையைவிட 0.12%குறைவு<br>2)மோகன் கான்ட்டிராக்டர் மதிப்பீடு தொகையைவிட 0.17%அதிகம். |
| 18 | அண்ணாதெரு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.ஏ.சி.நாகலிங்கம் மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு.<br>2)திரு.எம்.மாயன் மதிப்பீடு தொகையைவிட 0.28%அதிகம். |
| 19 | சீனிவாசா நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.எம்.மாயன் மதிப்பீடு தொகையைவிட 0.07%அதிகம்.<br>2)திரு.ஏ.சி.நாகலிங்கம் மதிப்பீடு தொகையைவிட 0.33%குறைவு. |
| 20 | திருவள்ளுவர் சிட்டி பேஸ்–II பகுதியில் ஆழ்துளை கிணறு மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திருவாளர் மேனகா அன் கோ மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு<br>2)மோகன் கான்ட்டிராக்டர் மதிப்பீடு தொகையைவிட 0.33% அதிகம். |
| 21 | எ.எஸ்.ஆர்.சிட்டி 1 வது வார்டு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திருவாளர் மேனகா அன் கோ மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு |

| | | | |
|---|---|---|---|
| | | | 2)மோகன்கான்ட்டிராக்டர் 0.68% அதிகம். |
| 22 | அம்பாள் நகர் அனெக்ஸ் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.போஸ்காந்தி மதிப்பீடு தொகையைவிட 0.07% குறைவு. |
| | | | 2)திரு.கே.அருண்குமார் மதிப்பீடு தொகையைவிட 1.33%அதிகம். |
| 23 | சீனிவாசா நகர் 3 வது வார்டு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.எம்.மாயன் மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு. |
| | | | 2)திரு.ஏ.சி.நாகலிங்கம் மதிப்பீடு தொகையைவிட 0.33%அதிகம். |
| 24 | சையத் சாதிக் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினி பவர் பம்பு அமைத்தல் | 200000 | 1)திரு.எம்.மாயன் மதிப்பீடு தொகையைவிட 0.07%குறைவு. |
| | | | 2)திரு.ஏ.சி.நாகலிங்கம் மதிப்பீடு தொகையைவிட 0.33%அதிகம். |

**அலுவலக குறிப்பு** – அ) வரிசை எண் 1 முதல் 24 வரை உள்ள பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரியவர்கள் நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று

ஆ) குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரருக்கு பணி உத்தரவு வழங்கிடவும் இதற்கான செலவினங்களை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.8**

அரசாணை (நிலை) எண்.79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.06.2022ன்படி 2022 ஜுன் 03ம் அன்று தமிழக அரசால் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 99வது பிறந்த நாளை முன்னிட்டு தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை முன்னிட்டு சுத்தமான, பசுமையான மற்றும் நீடித்த சுற்றுச்சூழலை உறுதி செய்யும் பொருட்டு நகரங்களில், பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன், ஒவ்வொரு மாதமும் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் தீவிர தூய்மைப் பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் (Cleanliness drive) நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்முகாம்களில் தன்னார்வ அமைப்புகள், குடியிருப்போர் நலச்சங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு ஊக்கப்படுத்தப்படும் மற்றும் “எனது குப்பை எனது பொறுப்பு” என தொடர் விழிப்புணர்வுகள் மற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு முதற்கட்டமாக வார்டு எண்.1, 2 பகுதிகளிலும் மற்றும் அல்டீஸ் அடுக்குமாடி குடியிருப்புகளிலும் தன்னார்வளர்கள் மூலம் மக்கும் மற்றும் மக்காத குப்பையை பொது மக்கள் பிரித்தளித்து வழங்கிட இரண்டு குப்பை கூடைகள் 1500 எண்ணிக்கை பெறப்பட்டு ஒவ்வொரு குடியிருப்புக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இந்கராட்சி பகுதிகளில் உள்ள இதர 25 வார்டுகளில் உள்ள அனைத்து குடியிருப்பு ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு குப்பை கூடைகள் வழங்குவதற்கு தேவையான நிதி ஆதாரத்தினை இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தொண்டு நிறுவனங்கள், வங்கிகள், தனியார் பள்ளிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களிடமிருந்து சமுதாய பொறுப்பு நிதி (CSR Fund) பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொது சுகாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் மாங்காடு கோவில் நகரை தூய்மையாக பராமரிக்கும் பொருட்டும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.9**

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தின்படி மாங்காடு நகராட்சியில் சொத்துவரி சீராய்விற்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் வரிவிதிப்பு கணக்கீட்டு படிவம் X & Y மாஸ்டர் List of Property Building சொத்தின் உரிமையாளர்களிடம் வார்டு வாரியாக பெறப்படும் மனுக்கள் விவரப் பதிவேடுகளை அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட கூட்டு நிறுவனத்தினடமிருந்து விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்தமைக்கும் தோராய செலவினம் தொகை ரூ.2.00லட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.10**

மாங்காடு நகராட்சியில் சொத்துவரி சீராய்வு குறித்த படிவங்கள் அச்சிட்டு வழங்க விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர் சங்குநகர் கூட்டுறவு அச்சகத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்கியது மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022–2023ஆம் ஆண்டிற்கு இலக்கு நிர்ணயம் செயப்பட்டுள்ளதை தொடர்ந்து, இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியின் முக்கிய இடங்களில் சி.சி.டி.வி கேமரா பொறுத்தும் பணி | 13.00 |
| 2 | ஸ்ரீ சக்ரா நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் | 28.00 |
| 3 | இரகுநாதபுரம் ஆரம்பப்பள்ளி கழிப்பிடம் | 10.00 |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.12

மாங்காடு நகராட்சியில் 2021–2022ன் 15வது நிதிக்குழு மான்ய திட்டம் (Untied Grant) கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளவும் மேலும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சைபர் சிட்டி முதல் கெங்கையம்மன் கோயில் தெரு குன்றத்துார் நெடுஞ்சாலை மெயின் ரோடு வரை பைப்லைன் விஸ்தரிப்பு பணி | 6.00 |
| 2 | மல்லிகா தியேட்டர் முதல் சிட்டி யுனியன் வங்கி குன்றத்துார் நெடுஞ்சாலை மெயின் ரோடு வரை பைப்லைன் விஸ்தரிப்பு பணி | 5.00 |
| 3 | வெள்ளீஸ்வரன் கோயில் தெரு, பலாதோப்பு லேன், மாந்தியம்மன் கோயில் தெரு, கணபதி நகர், ஆர்.எஸ்.ஆர்.கார்டன் மற்றும் சக்தி நகர் பகுதிகளில் பைப்லைன் விஸ்தரிப்பு பணி | 6.55 |
| 4 | லித்தியம் பேட்டரி மூலம் இயங்கும் (BOV) வாகனம் சப்ளை செய்தல் | 17.80 |
| 5 | இலகுரக வர்த்தக வாகனம் (LCV) சப்ளை செய்தல் | 26.91 |
| 6 | ஹரி அவென்யூ வார்டு எண்.18ல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் (RO Plant) அமைத்தல் | 8.00 |
| | மொத்தம் | 70.26 |

<u>அலுவலக குறிப்பு</u>

15வது நிதிக்குழு மான்ய திட்ட நெறிமுறைகளின்படி தேர்வு செய்யப்பட்டுள்ள குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.13

மாங்காடு நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 27 வார்டுகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள வெளிக்கொணர்வு முறையில் (Outsourcing) 30 DBC பணியாளர்களை 01.06.2022 முதல் 31.07.2022 முடிய இரண்டு மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ளள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பிட்டு பட்டியலின்படி பின்வரும் விவரப்படி குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு மன்ற முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் (Outsourcing) 30 பணியாளர்களை 2022-2023 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் இரண்டு மாத காலத்திற்கு பணியமர்த்துதல். (ஜூன் 2022 முதல் ஜூலை 2022 வரை). | 1)கிருபை மகளிர் சுய உதவி குழு குறைவு<br>2)ராஜீவ்காந்தி மகளிர் சுய உதவி குழு அதிகம். |

**அலுவலக குறிப்பு**

அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் எண்.14

மாங்காடு நகராட்சியில் காமாட்சி அம்மன் கோயில் தெரு ஒத்தவாடை தெருவில் உள்ள பொது கழிப்பிடம் ஆண்டு குத்தகை அடிப்படையில் கட்டண கழிப்பிடம் திரு.எ.வெங்கடேசன் என்பவர் பராமரிப்பு குத்தகை எடுத்துள்ளார். 2020–2021ல் ஆண்டு குத்தகை தொகை ரூ.64496/– நிலுவையாக உள்ளது. குத்தகைதாரர் 2020–2021ம் ஆண்டு கொரோனா நோய் தொற்று காரணமாக முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டதாலும் காமாட்சியம்மன் கோயில் மூடப்பட்டதாலும் பொதுமக்கள் யாரும் கோயிலுக்கு வருகை தராததாலும் கட்டண கழிப்பிடம் மூடப்பட்டு இருந்ததால் குத்தகை தொகையினை குறைத்து தர கோரிய கடிதம் மன்றத்தின் முடிவிற்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் முடிவு செய்யலாம்.

**பொருள் எண்.15**

தமிழக சட்ட பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விதி எண்.110ன் கீழ் நகராட்சி நிர்வாகம் தொடர்பான மான்ய கோரிக்கையின் அறிவிப்பு எண்.23ல் புதியதாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சிகளில் புதிய அலுவலக கட்டடம் கட்டுதல் குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சிக்குட்பட்ட நில அளவை எண்.124—ல் உள்ள மாங்காடு நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடம் அமைந்துள்ள இடத்தில் புதிய அலுவலக கட்ட தேவையான நிதியினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து பெருவதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.60' நாள்.31.05.2022ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, அண்ணா பல்கலைகழகம் மூலம் மண் பரிசோதனை செய்யப்பட்டு அதனடிப்படையில் ரூ.3.50கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடம் கட்ட நகராட்சிகள் நிர்வாக இயக்குநர், சென்னை—28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.7628/2022/MA1, நாள்.08.06.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மாங்காடு பேரூராட்சி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதை தொடர்ந்து புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட உள்ளதாலும், தற்போது புதிய நகராட்சி அலுவலகம் கட்ட இந்நகராட்சிக்கு சொந்தமான இடம் ஏதும் இல்லாததாலும் சக்ரா நகர் பூங்கா இடத்தில் புதிய நகராட்சி அலுவலக கட்டடம் கட்ட மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

<u>**பொருள் எண். 16**</u>

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கான திட்டம் (street vendors welfare) மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர்அவர்களால் 07.04.2022 அன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் அறிவிக்கப்பட்டு 2022—23 ஆம் ஆண்டிற்கு தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திடவும் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு எவ்வித சிரமமின்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்க புதியதாக சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடத்த 04.07.2022 அன்று ஒப்பந்தம் கோர நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**பொருள் எண். 17**</u>

மாங்காடு பேரூராட்சி அரசாணை நிலை எண்.94, நாள்.01.11.2021ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து வரியினங்கள், தேசிய தகவல் மைய மென்பொருள் (NIC) மூலம் வசூல்செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது நகராட்சி துறையில் வரி மற்றும் வரியில்லா இனங்கள் 29 மாடியூல்கள் (Module) UTIS மூலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் தேசிய தகவல் மையத்திலிருந்து நகராட்சிக்கு தொடர்பான தகவல்கள் பெற்று UTIS மூலம் செயல்படுத்த சிட்டி யூனியன் வங்கியுடன் online Payment gateway Agreement செய்து கொள்ள நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண்.25896/2021/IT நாள்.23.05.2022ன்படி தெரிவிக்கப் பட்டுள்ளது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

<u>பொருள் எண்.18</u>

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் உயர் கோபுர மின்விளக்குகள் மற்றும் குடிநீர் மின் இணைப்பு மோட்டார்கள் ஆகியவைகளுக்கு தினசரி நகராட்சி மின் பணியாளர்களை கொண்டு இயக்கப்பட்டு வருவது சிரமமாக உள்ளதால் மேற்படி மின் இணைப்புகளுக்கு தானியங்கி சுவிட்சுகள் 100 எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் எண்.19

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பின்வரும் விவரப்படி அரசு / பொதுநிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற வார்டு உறுப்பினர்கள் அளித்துள்ள கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வார்டு எண் | வேலையின் பெயர் |
|---|---|
| 2 | அம்பாள் நகர், சூரியா அவென்யூ, சமயபுரம், திருவள்ளுவர் சிட்டி பேஸ் – II இரகுநாதபுரம் கிருபானந்தவாரியார் நகர் ஆகிய பகுதிகளில் 25 மின் விளக்குகளை மாற்றி சரிசெய்து தர வேண்டியும் கிருபானந்தவாரியார் நகர் 4வது குறுக்கு தெருவின் புதியதாக 2குடிநீர் குழாய் அமைத்தல். சர்வே எண்.65 அக்ரஹார குளத்தினை நில அளவை செய்தல். சீனிவாசா நகர் பகுதியில் 150அடி ஆழத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி. |
| 10 | பத்மாவதி நகர் பகுதியில் டைமர் பாக்ஸ் அமைத்தல். மூகாம்பிகை தெரு, பிரணாவதி தெரு, பகவதி தெரு தேவி கருமாரி தெரு பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல். |
| 11 | ஓம் சக்தி நகர் 3வது குறுக்கு தெரு குடிநீர் பைப்லைன் பழுதுநீக்கம் செய்தல். |

| | |
|---|---|
| 23 | கே.கே.நகர் 3வது தெருவில் மழைநீர் தேங்கியுள்ளதை அகற்ற வேண்டியும் கால்வாயை அகற்றிவிட்டு புதிய பைப்லைன்அமைத்தல், 23வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் 2 தெருக்களில் போர், மற்றும் கைபம்ப் பழுதாகியுள்ளது மற்றும் 7 இடங்களில் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல், கே.கே.நகர் முதல் தெருவில் 3 கம்பங்கள், இரண்டாவது தெருவில் 1 கம்பம், மூன்றாவது தெருவில் 3கம்பங்கள், 4வது தெருவில் 2 கம்பங்கள், 5வது தெருவில் 3கம்பங்கள், 6வது தெருவில் 1 கம்பம், மேல்தெருவில் 3 கம்பங்கள், காமாட்சி நகரில் 1 கம்பம், சுபம் நகரில் 3 கம்பங்கள், திருப்பதி நகரில் 1 கம்பம், சி.எஸ்.ஐ பள்ளி தெருவில் 2 கம்பங்கள், தோப்பு தெருவில் 2 கம்பங்கள் மற்றும் அண்ணா தெரு சுடுகாட்டில் 6 கம்பங்கள் அமைத்தல். |
| 24 | எம்.ஜி.ரங்கநாதன் நகர் பகுதிகயில் சுமார் 150 ஆதிதிராவிட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி மக்கள் வசிக்கும் பகுதிக்கென தனியாக ஆழ்துளை போர் மற்றும் மின் மோட்டார் அமைத்து நேரடி இணைப்பு வழங்குதல். |
| 25 | பட்டூர் மெயின் ரோடு பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ள பொதுக்கழிப்பிடத்தில் உள்ள மின் மோட்டார் பழுதடைந்துள்ளதை சரிசெய்துதர கோரியது. |
| 27 | RSR கார்டன் பகுதியில் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சுற்றுசுவர் அமைத்து பூங்கா அமைத்தல் மற்றும் பட்டூர் பானு நகர் 2 மின்கம்பம், கணபதி நகர் 2 கம்பம், லீலாவதி நகர்1 கம்பம் வன்னியர்பட்டு 2 மின்கம்பம், ரஷீதாபீ நகர் 2 மின்கம்பம் அமைத்தல் |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம் .

**பொருள் எண்.20**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகலான பட்டூர் ஹாஜி அலி நகர், சக்ரா நகர், ஹரி அவென்யூ மற்றும் பத்திரிமேடு பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் இதர பணிகளை மேற்கொண்டு புனரமைப்பு செய்யவும் இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.21**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட ராமகிருஷ்ணாபுரம் வளம் மீட்பு பூங்கா பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட வளாகத்தின் நுழைவு வாயிலின் வலதுபுறம் புராதன குப்பைகள் தொடர்ந்து கொட்டப்பட்டு வருவதால் மலைப்போல் குவிந்து வருகிறது எனவே பழுதடைந்த ஷெட் பகுதியை புனரமைப்பு செய்து Dumping yard-ஆக பயன்படுத்தவும் அதற்கான பராமரிப்பு பணி செலவினங்களை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.22**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட ராமகிருஷ்ணாபுரம் வளம் மீட்பு பூங்கா பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட வளாகத்தில் கழிப்பிடத்தினை நவீன படுத்தவும் மற்றும்

ஆழ்துளை கிணறு அமைக்கவும், அன்னை இந்திரா நகர் பகுதி மற்றும் தென்காலனி பகுதியில் அமைந்துள்ள பொது கழிப்பிடங்களை புனரமைப்பு செய்திடவும் இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.23**

மாங்காடு நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு பயன்பாட்டில் உள்ள காம்பேக்டர் லாரியில் (TN22CM8523) ஏற்பட்டுள்ள பழுதுகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பழுதுநீக்கம் செய்திடவும், இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.24**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 நரிவன சாலை பகுதியில் எம்.ஜி.ஆர் நகர் முதல் அடிசன் நகர் வரை 500மீட்டர் நீளம் ரூ.120.00 லட்சத்தில் மழைநீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கும் மற்றும் இதற்கான செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது ஏதேனும் ஒரு அரசு நிதியிலிருந்தோ பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

நகராட்சி பொது நிதி இருப்பின் அடிப்படையில் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.25**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 செல்வகணபதி நகர் முதல் மாரியம்மன் கோயில் தெரு வரை 460மீட்டர் நீளம் ரூ.38.00 லட்சத்தில் மழைநீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடுட்டிற்கும் மற்றும் இதற்கான செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது ஏதேனும் ஒரு அரசு நிதியிலிருந்தோ பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.26**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியான பட்டூர் ஆர்.எஸ்.ஆர்.கார்டன் முதல் மணப்பாத்தான் கால்வாய் வரை 650 மீட்டர் நீளத்தில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.27**

எதிர்வரும் பருவமழை முன்னிட்டு உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி பொது மக்கள் பாதிக்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள அனைத்து கல்வெர்ட்கள், சிறுபாலங்கள், வடிகால்களில் உள்ள கசடுகளை ரூ.7.00 லட்சம் மதிப்பீட்டில் அடிப்புறத்துடன் 100சதவீதம் தூர்வாரி தூய்மை பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 23.06.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் பணி மேற்கொள்ள JVP எண்டர்பிரைசஸ் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மழைக்காலங்களில் வடிகால்களில் மழைநீர் சீராக செல்வதை உறுதிசெய்யும் பொருட்டு 100சதவீதம் தூர்வாரி தூய்மை பணியினை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.28**

மாங்காடு நகராட்சியின் அனைத்து எல்லை பகுதிகள் மற்றும் காமாட்சியம்மன் திருக்கோயிலுக்கு செல்லும் வழி தொடர்பாக பொதுமக்கள் அறியும் வன்னம் எல்லை பலகைகள் ரூ.9.90 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்க நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 28.06.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் .குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரரான சூர்யா டிஜிட்டல் பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியமைக்கும் பின்னேற்பு ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.29**

மாங்காடு நகராட்சியில் பொது நிதி 2022–2023ன் கீழ் பின்வரும் சாலைப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயாரித்து வரப்பெற்றுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1 | கிருஷ்ணன் நந்தவனம் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 960000 |
| 2 | 1 | விக்னேஷ்வரா நகர் பிரதான சாலை தார் சாலை அமைத்தல் | 1000000 |
| 3 | 1 | விக்னேஷ்வரா நகர் 1வது குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 430000 |
| 4 | 2 | சமயபுரம் நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 1830000 |
| 5 | 2 | அம்பாள் நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 1520000 |
| 6 | 2 | சூர்யா அவென்யூ பகுதியில் தார் சாலை அமைத்தல் | 500000 |

| | | | |
|---|---|---|---|
| 7 | 2 | கிருபானந்தவாரியார் நகர் 1,2,3 மற்றும் 4வது தெரு பகுதியில் தார் சாலை அமைத்தல் | 1000000 |
| 8 | 3 | ரகுநாதபுரம் மெயின்ரோடு தார்சாலை அமைத்தல் | 970000 |
| 9 | 3 | சிவந்தி நகர் தார்சாலை அமைத்தல் | 480000 |
| 10 | 3 | பிரியம் அவென்யூ தார்சாலை அமைத்தல் | 910000 |
| 11 | 3 | சக்தி நகர் தார்சாலை அமைத்தல் | 1100000 |
| 12 | 4 | ஆஞ்சநேயர் கோயில் தெரு தார்சாலை அமைத்தல் | 460000 |
| 14 | 4 | கிழக்கு மீனாட்சி நகர் தார் சாலை அமைத்தல் | 2540000 |
| 15 | 4 | மீரா நகர் தார் சாலை அமைத்தல் | 400000 |
| 16 | 4 | திருப்பதி நகர் தார் சாலை அமைத்தல் | 2100000 |
| 17 | 4 | ரிஷி பள்ளி சாலை தார் சாலை அமைத்தல் | 950000 |
| 18 | 5 | திருமாநகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 960000 |
| 19 | 5 | உருது பள்ளி எதிரில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 630000 |
| 20 | 5 | காமாட்சியம்மன் நகர் 1வது மெயின்ரோடு மற்றும் குறுக்கு சாலைகள் தார் சாலை அமைத்தல் | 1050000 |
| 21 | 5 | காமாட்சி அம்மன் நகர் 2வது தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 910000 |
| 22 | 6 | அடிசன் நகர் பூங்கா தார் சாலை அமைத்தல் | 1840000 |
| 23 | 6 | அடிசன் நகர் ராகவேந்திரா தெரு தார்சாலை அமைத்தல் | 850000 |
| 24 | 6 | நரிவனம் சாலை குறுக்கு தெரு 1,2 பகுதியில் தார் சாலை அமைத்தல் | 1060000 |
| 25 | 6 | அம்மன் நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 1060000 |
| 26 | 6 | அடிசன் நகர் ஹரிணி இமாலயா தெரு பகுதியில் தார் சாலை அமைத்தல் | 590000 |
| 27 | 6 | அடிசன் நகர் உண்ணாமலை தெரு தார் சாலை அமைத்தல் | 600000 |
| 28 | 6 | பத்மாவதி நகர் 4வது தெரு தார் சாலை அமைத்தல் | 860000 |
| 29 | 6 | நரிவனம் சாலை தார் சாலை அமைத்தல் | 200000 |
| 30 | 6 | அருள் ஜோதி வள்ளலாளர் தெரு தார் சாலை அமைத்தல் | 1040000 |
| 31 | 7 | வசந்தபுரம் மெயின்ரோடு தார் சாலை அமைத்தல் | 2000000 |
| 32 | 7 | ஆதம் வில்லா குறுக்கு தெரு1,2,3பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1250000 |
| 33 | 7 | மாருதி என்கிளேவ் வசந்தபுரம் மெயின்ரோடு தார் சாலை அமைத்தல் | 1750000 |
| 34 | 8 | விநாயகர் கோயில் தெரு தார் சாலை அமைத்தல் | 580000 |
| 35 | 8 | வசந்தம் நகர் மெயின்ரோடு தார் சாலை அமைத்தல் | 1330000 |
| 36 | 8 | வெங்கடேஷ்வரா தெரு தார் சாலை அமைத்தல் | 1210000 |
| 37 | 8 | காளிகாம்பாள் நகர் தார் சாலை அமைத்தல் | 1230000 |
| 38 | 9 | கிழக்கு காமாட்சி அம்மன் நகர் தார் சாலை அமைத்தல் | 1480000 |
| 39 | 9 | பாலாஜி அம்பாள் நகர் 5,6,7,8வது தெருக்கள்தார் சாலை அமைத்தல் | 2000000 |
| 40 | 9 | வெள்ளீஸ்வரன் நகர் 1,2,3,4 குறுக்கு தெருக்கள் தார் சாலை அமைத்தல் | 2500000 |
| 41 | 9 | குபேரன் தெரு தார் சாலை அமைத்தல் | 1800000 |
| 42 | 9 | கணபதி நகர் தார் சாலை அமைத்தல் | 1050000 |
| 43 | 10 | பாலாஜி நகர் தார் சாலை அமைத்தல் | 600000 |
| 45 | 10 | பிரணாவதி நகர் 1வது தெரு மற்றும் பரஸ்நாத் தெரு தார் சாலை | 560000 |
| 47 | 10 | சுந்தரேசன் 1,2 வது தெரு தார் சாலை அமைத்தல் | 550000 |
| 48 | 11 | ஓம்சக்தி நகர் 2வது குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 320000 |
| | 11 | ஓம்சக்தி நகர் சமுதாய கூடம் பராமரிப்பு பணி | 850000 |
| 49 | 12 | ராஜகுமாரி தெரு தார் சாலை அமைத்தல் | 440000 |
| | 12 | ஜெயகர் தெரு தார் சாலை அமைத்தல் | 662000 |
| 50 | 13 | செந்தமிழ் நகர் பிள்ளையார் கோயில் தெரு முதல் மசூதி தெரு தார் சாலை அமைத்தல் | 350000 |
| 51 | 13 | செந்தமிழ் நகர் சாதிக் நகர் இணைப்பு சாலை தார் சாலை அமைத்தல் | 400000 |

| | | | |
|---|---|---|---|
| 52 | 14 | சீனிவாசா நகர் மற்றும் ஜனனி நகர் அனெக்ஸ் தார் சாலை அமைத்தல் | 3710000 |
| 54 | 15 | விசாலாட்சி நகர் முதல் மேல்ரகுநாதபுரம் மெயின்ரோடு வரை தார் சாலை அமைத்தல் | 2450000 |
| 55 | 16 | அப்பாவு நகர் 1வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 1680000 |
| 56 | 16 | சிவானந்தா நகர் சிமெண்ட் சாலை சாலை அமைத்தல் | 960000 |
| 57 | 16 | சையத் சாதிக் நகர் தார் சாலை அமைத்தல் | 140000 |
| 58 | 17 | மாரியம்மன் கோயில் தெரு முதல் செல்வகணபதி நகர் தார் சாலை அமைத்தல் | 580000 |
| 59 | 18 | முத்துசாமி நகர் மற்றும் முத்து சாமி அவென்யூ முதல் குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 700000 |
| 60 | 18 | ஹரி அவென்யூ தார் சாலை அமைத்தல் | 1150000 |
| 61 | 18 | மல்லிகா நகர் தார் சாலை அமைத்தல் | 510000 |
| 62 | 18 | கிருஷ்ணாநகர் சிமெண்ட் சாலை அமைத்தல் | 680000 |
| 63 | 18 | சீனிவாசா நகர் தார் சாலை அமைத்தல் | 960000 |
| 64 | 19 | சண்முகாணந்தா கோயில்தெரு தார் சாலை அமைத்தல் | 2500000 |
| 65 | 20 | வைகுண்டபெருமாள் கோயில்தெரு தார் சாலை அமைத்தல் | 1310000 |
| 66 | 21 | காமராஜ் நகர் தார் சாலை அமைத்தல் | 400000 |
| 67 | 21 | மங்களபுரம் முதல் சபரி நகர் தார் சாலை அமைத்தல் | 400000 |
| 68 | 23 | நியூ காமாட்சி நகர் தார் சாலை அமைத்தல் | 570000 |
| 69 | 23 | தோப்புதெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1000000 |
| 70 | 23 | கே.கே.நகர் மெயின்ரோடு தார் சாலை அமைத்தல் | 1300000 |
| 71 | 23 | திருப்பதி நகர் தார் சாலை அமைத்தல் | 940000 |
| 72 | 24 | ரங்கநாதன் நகர் தார் சாலை அமைத்தல் | 400000 |
| 73 | 24 | பொன்னம்பலம் நகர் தார் சாலை அமைத்தல் | 640000 |
| 74 | 24 | அண்ணாதெரு மயான சாலை தார் சாலை அமைத்தல் | 1015000 |
| 75 | 25 | பட்டு பேருந்து நிலையம் உள்ளே பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 320000 |
| 75 | 25 | ஹாஜிஅலிநகர் 1வது மற்றும் 2 வது குறுக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 1450000 |
| 76 | 25 | ஏ.எஸ்.நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 950000 |
| 77 | 25 | ரசீதா பீ நகர் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 170000 |
| 78 | 26 | சின்னப்பன் நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 370000 |
| 79 | 26 | காயிதே மில்லத் நகர் தார் சாலை அமைத்தல் | 1570000 |
| 80 | 26 | சர்லஸ் நகர் தார் சாலை அமைத்தல் | 290000 |
| 81 | 26 | முஸ்லீம் சுடுகாடு சாலை தார் அமைத்தல் | 920000 |
| 82 | 27 | அருணாச்சலம் நகர் 1,2,3,4 குறுக்கு தெருக்கள் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 850000 |
| 83 | 27 | வி.எம்.எஸ்.நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 2600000 |
| 84 | 27 | இந்திரா நகர்,கலைஞர் தெரு மெயின்ரோடு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1310000 |
| 85 | 27 | பஜார் தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 950000 |
| 86 | 25 | வன்னியர் பட்டு 1,2,3,4வது குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 1290000 |
| 87 | 27 | எஸ்.கே.எம். நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 260000 |
| 88 | 27 | பள்ளிவாசல் கிழக்கு தெரு தார் சாலை அமைத்தல் | 650000 |
| 89 | 27 | லீலாவதி நகர் முதல் சாகர் மஹால் வரை தார் சாலை அமைத்தல் | 1820000 |
| 90 | 27 | சாந்தி நகர் 1,2,3 மற்றும் 4 வது தெருக்கள் தார் சாலை அமைத்தல் | 1000000 |
| 91 | 27 | லீலாவதி நகர் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 100000 |
| 92 | 3 | சக்தி நகர் பூங்கா மேம்பாடு பணி | 700000 |
| | | மொத்தம் | 90100000 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மாங்காடு நகராட்சி பொதுநிதி இருப்பிற்கு எற்றவாறு பணிகள் மேற்கொள்ளவும், அல்லது ஏதேனும் திட்ட நிதி பெற்றோ பணிகள் மேற்கொள்ள மன்றம் பரிசீலனை செய்யலாம்.

**பொருள் எண்.30**

மாங்காடு நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–2022ன் கீழ் வசந்தபுரம் மற்றும் ரகுநாதபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் Water Tank மற்றும் Softner Filter நிறுவுதல் மற்றும் நீர் மூழ்கி மோட்டார் அமைத்தல் பணிக்கு ரூ.4.77லட்சம் மதிப்பீட்டில் செய்யவும் மற்றும் இதற்கான செலவினம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.31**

மாங்காடு நகராட்சியில் வாலாஜா தெரு தார்சாலை முழுவதும் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக மண் படிந்துள்ளதாகவும் அதை அகற்றவும், அத்தார்சாலை பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்யவும், வேகத்தடைகள் 3 எண்ணிக்கை அமைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

நகராட்சி பொறியாளர் குறிப்பு பெற்று உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.32**

அரசாணை (நிலை) எண்.59 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.22.04.2022ன்படி கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2021–2022ன் கீழ் மாங்காடு நகராட்சிக்குட்பட்ட ரகுநாதபுரம் மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை ரூ.1.36கோடி மதிப்பீட்டில் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக இயக்குநரக முதன்மை பொறியாளர், நகராட்சிகள் நிர்வாகம் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண்.001/2022, நாள்.17.05.2022ன்படி மேற்படி பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து 08.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த QUN Interiors என்ற நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரது முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி

கீழ்ரகுநாதபுரம் சர்வே எண்.100ல் அமைந்துள்ள மயான பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்க பூர்வாங்க பணிகள் மேற்கொள்ள தல ஆய்வு செய்த போது அப்பகுதி பொது மக்களால் நகராட்சி ஆணையர், நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணை தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரிடம் எழுத்துபூர்வமாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, 02.07.2022 அன்று திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் நேரடியாக தல ஆய்வு செய்யப்பட்ட போது அப்பகுதி பொது மக்களால் மாற்று இடத்தில் நவீன எரிமேடை அமைக்க கோரிக்கை வைக்கப்பட்டது.

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட ரகுநாதபுரம், கீழ்ரகுநாதபுரம், மேல்ரகுநாதபுரம் ஆகிய மயான பூமி மற்றும் ருத்ர பூமி தொடர்பான வருவாய் துறை ஆவணங்களுடன், நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலக உதவியாளர் ஆகியோரால் நேரடியாக தல ஆய்வு செய்ததில் பொது மக்களால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்ட நில அளவை எண்.100 தவிர உள்ள நில அளவை எண்களில் மயான பூமி/ருத்ர பூமி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே அரசாணை (நிலை) எண்.59 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.22.04.2022ன்படி கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2021–2022ன் கீழ் மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் அமைக்க மாற்று இடம் தெரிவு செய்ய மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.33**

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கடித எண்.CMDA/PP/INST/C/0249/2022, நாள்.20.06.2022 மாங்காடு நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.473/1A1, 473/2A, 473/3A, 473.4A2, 473/A1, 473/6A1, 473/7A1, 473/8A1 மற்றும் 473/9A1A ல் மகரிஷி வித்யா மந்தீர் பள்ளி 3வது தளம் கூடுதல் கட்டிடம் 2880.94ச.மீ அளவில் கட்டிடம் கட்ட தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பள்ளி கட்டிடத்திற்கு மாங்காடு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் தள ஆய்வு மேற்கொண்டு நகராட்சி துணை விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் வசூலித்து மேற்படி கட்டிடத்திற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.34**

மாங்காடு நகராட்சியில் பூந்தமல்லி–குன்றத்தூர் நெடுஞ்சாலையில் நெடுஞ்சாலை துறையினால் கட்டப்பட்டு வரும் மழைநீர் வடிகால் சாலையில் இருபுறங்களிலும் நடைபெற்று

வருகிறது. இது மாங்காடு பட்டுகூட்ரோடு தந்தி கால்வாயில் சென்று முடிவடைகின்றது. மழைக்காலங்களில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் அவசர அவசியம் கருதி தந்தி கால்வாயில் இருந்து முத்துக்குமரன் கல்லூரி அருகில் உள்ள மணப்பாத்தன் கால்வாய் வரையில் சாலையின் இருபுறங்களிலும் மழைநீர் கால்வாய் அமைக்க நெடுஞ்சாலை துறைக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.35**

மாங்காடு நகராட்சியில் அரசினால் அறிவிக்கப்படும் திட்டங்களை பொது மக்கள் அறியும் வண்ணம் நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வு பேனர், ஹாங்கில், பதாகைகள் விழிப்புணர்வு நோட்டீசுகள் உள்ளூர் அச்சகத்திலிருந்து அச்சடித்து கொள்முதல் செய்திடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.36**

மாங்காடு நகராட்சியில் தற்போதைய கொரோனா பெருந்தொற்று காலத்தில் குப்பைகளை தேங்க விடாமல் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், நகரில் தேங்கியுள்ள கழிவுகளை கனரக டிப்பர் லாரிகள் கொண்டு (வாடகை, டிரைவர் பேட்டா, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி மற்றும் இதர செலவினங்கள் உட்பட) நாள் வாடகை அடிப்படையில் அமர்த்தி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.37**

நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.**31112/2021**/CFC/ நாள்.**20.06.2022**ன்படி **15**வது நிதிக்குழு மான்யம் (CFC Fund)ன் கீழ் பின்வரும் பணிகள் மாங்காடு நகராட்சியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| **1** | ஸ்டெப் ஸ்டோன் SKR பிரைட் கார்டன் மெயின் சாலை தார்சாலை அமைத்தல். | **27.00** |

| | | |
|---|---|---|
| 2 | மீனாட்சி நகர் மேற்கு தெரு சாலை தார்சாலை அமைத்தல். | 19.84 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.38**

மாங்காடு நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் அறை, துணைத்தலைவர், தேர்தல் நடத்தும் அலுவலர் அறை, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அறை, நகர்மன்ற கூடம் புனரமைப்பு பணி மற்றும் இவற்றுக்கான தளவாட பொருட்கள் சப்ளை இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.50/2022/அ1, நாள்.05.01.2022ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்குறிப்பிட்ட விவரப்படி 21.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் அறை, தேர்தல் நடத்தும் அலுவலர் அறை, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அறை, நகர்மன்ற கூடம் புனரமைப்பு பணி மற்றும் இவற்றுக்கான தளவாட பொருட்கள் சப்ளை செய்தல் | ரூ.9,80,000/— | திருவாளர் ஓம்சக்தி எண்டர்பிரைசஸ் மதிப்பீடு தொகையை விட 0.10% குறைவு |
| | | | திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் மதிப்பீடு தொகையை விட 4.40% அதிகம் |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர் ஓம்சக்தி எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரருக்கும், மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு பின்னேற்பு ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.39**

மாங்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை வளம்மீட்பு பூங்கா அருகில், தற்போதைய கொரோனா பெருந்தொற்று காலத்தில் குப்பைகளை தேங்க விடாமல் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், நகரில் தேங்கியுள்ள கழிவுகளை கனரக டிப்பர் லாரிகள் கொண்டு (வாடகை, டிரைவர் பேட்டா, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி மற்றும் இதர செலவினங்கள் உட்பட) நாள் வாடகை அடிப்படையில் அமர்த்தி பணியினை மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.10/2021/அ1, நாள்.25.05.2022ன்படி விலைப்புள்ளி கோரியதில் பின்வரும் விவரப்படி 02.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | விலைப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை வளம்மீட்பு பூங்கா அருகில் | 9,70,000/— | திருவாளர் ஓம் சக்தி எண்டர்பிரைசஸ், நசரத்பேட்டை, | 12000/— |

| | | | | |
|---|---|---|---|---|
| | தேங்கியுள்ள கழிவுகளை அகற்ற டிப்பர் லாரிகள் சப்ளை செய்தல் பணி (வாடகை, டீசல், ஆயில், டிரைவர் பேட்டா உட்பட ஒரு நடைக்கு) | | சென்னை–123. | |
| | | | திருவாளர் ராதா டிரான்ஸ்போர்ட், சிங்கபெருமாள் கோயில்–603204. | 12500/– |
| | | | பி.சரவணா டிரான்ஸ்போர்ட், பூந்தமல்லி, சென்னை–56. | 13500/– |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் ஓம் சக்தி எண்டர்பிரைசஸ், நசரத்பேட்டை, சென்னை–123 நிறுவனத்திற்கு மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு வழங்கியமைக்கு பின்னேற்பு ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.40**

மாங்காடு நகராட்சிக்கு 2022 ஜுலை மாதத்திற்கு தேவையான தெருவிளக்கு உபகரணங்கள், பொது சுகாதார கிருமி நாசினிகள், பொது சுகாதார உதிரிப்பொருட்கள் மற்றும் குடிநீர் பராமரிப்பிற்கு தேவையான உபகரணங்கள் ஆண்டு ஒப்பந்தாரரிடம் வாங்கிக்கொள்ள மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.41**

மாங்காடு நகராட்சியில் 2022–2023ம் ஆண்டிற்கு புதியதாக பின்வரும் ஒப்பந்ததாரர் பதிவு செய்ய கோரியது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | திரு.க.ராஜேஷ் த/பெ.கலைநேசன் | எண்.3, காமாட்சியம்மன் கோயில் தெரு, மாங்காடு, சென்னை–600122. |

<u>அலுவலக குறிப்பு</u>

நகராட்சி பொறியாளரின் குறிப்பின்படி உரிய கட்டணங்கள் வசூலித்து பதிவு செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.42**

மாங்காடு நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 27 வார்டுகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள வெளிக்கொணர்வு முறையில் (Outsourcing) 30 DBC பணியாளர்களை 01.06.2022 முதல் 31.07.2022 முடிய இரண்டு மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நகர்மன்ற தலைவர் அவர்களின் 01.06.2022 தேதிய முன் அனுமதியின்படி பணி செய்ய உத்திரவு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து, M/s.கிருபை மகளிர் சுய உதவி குழுவின் ஒப்பந்த காலம் 31.07.2022வுடன் முடிவடைகிறது. தற்போது 01.08.2022 முதல் 30.09.2022 முடிய இரண்டு மாதங்களுக்கு ஒப்பந்த காலத்தை நிட்டிப்பு செய்யவும் மேற்படி

செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் பரிசீலனைக்கும் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.43**

மாங்காடு நகராட்சியில் பொது நிதி 2022–2023ன் கீழ் பின்வரும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளவும் நகராட்சி பொறியாளரால் தயாரித்து வழங்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1 | புற்று கோயில் முதல் சிவந்தி நகர் வரை மழைநீர் வடிகால் பணி | 2800000 |
| 2 | 2 | கிருபானந்தவாரியார் மழைநீர் வடிகால் பணி | 6000000 |
| 3 | 3 | சிவந்தி நகர் மழைநீர் வடிகால் அமைத்தல் | 1000000 |
| 4 | 3 | பிரியம் அவென்யூ மழைநீர் வடிகால் அமைத்தல் | 950000 |
| 5 | 4 | திருப்பதி நகர் மழைநீர்வடிகால் உயர்த்தி அமைத்தல் | 900000 |
| 6 | 4 | திருமுருகன் நகர் மழைநீர் வடிகால் பணி | 5500000 |
| 7 | 5 | காமாட்சி அம்மன் நகர் அனெக்ஸ் முதல் அம்பாள் நகர் ராமகிருஷ்ணாஅவென்யூ மழைநீர் வடிகால் பணி | 7800000 |
| 8 | 6 | பத்மாவதி நகர் மழைநீர் வடிகால் பணி | 3500000 |
| 9 | 6 | அடிசன் நகர் பூங்கா தெரு மழைநீர் வடிகால் பணி | 3000000 |
| 10 | 6 | நரிவனம் சாலை மழைநீர் வடிகால் பணி | 9000000 |
| 11 | 7 | கண்ணதாசன் நகர் மழைநீர் வடிகால் அமைத்தல் | 230000 |
| 12 | 7 | மாருதி என்கிளேவ் பொன்னி நகர் பகுதியில் சிறுபாலம் அமைத்தல் | 500000 |
| 13 | 9 | குபேரன் தெரு மழைநீர் வடிகால் பணி | 2000000 |
| 14 | 16 | அப்பாவுநகர் மற்றும் சக்ரா நகர் சிறுபாலம் அமைத்தல் | 400000 |
| 15 | 19 | பலாதோப்பு தெரு மழைநீர் வடிகால் பணி | 1500000 |
| 16 | 20 | வைகுண்டபெருமாள் கோயில் தெரு மழைநீர் வடிகால் பணி | 3500000 |
| 17 | 21 | பாலமுருகன் நகர் மழைநீர் வடிகால் பணி | 2800000 |
| 18 | 24 | பொன்னம்பலம் நகர் மழை நீர் வடிகால் அமைத்தல் | 1600000 |
| 19 | 27 | பஜார் தெரு முதல் சகர் மஹால் வரை மழை நீர் வடிகால் பணி | 8500000 |
| 20 | 27 | சாந்தி நகர் 1,2,3 மற்றும் 4 வது தெருக்கள் மழைநீர் வடிகால் அமைத்தல் | 2000000 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

நகர்மன்ற தலைவர்
மாங்காடு நகராட்சி
காஞ்சிபுரம் மாவட்டம்